
# கதை கதையாம் காரணமாம்






**தமிழ் ஐயா வெளியீட்டகம்**

ஔவைக்கோட்டம், திருவையாறு - 613 204

தஞ்சாவூர் மாவட்டம்.

## நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கதை கதையாம் காரணமாம் |
| வகை | : | கதைத் தமிழ் ஆய்வு |
| பதிப்பாசிரியர் | : | க. கண்ணகி<br>(பேசி : 94867 42503) |
| முதல்பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2046<br>(சூலை, 2015) |
| பதிப்புரிமை | : | தமிழ் ஐயா வெளியீட்டகம்,<br>திருவையாறு |
| நூல் அளவு | : | டெம்மி 1x8 |
| I.S.B.N. எண் | : | 978-81-930633-0-09 (V-IV) |
| எழுத்து அளவு | : | 11 |
| பக்கங்கள் | : | 528 |
| படிகள் | : | 500 |
| கட்டுமானம் | : | சாதாரணம் |
| விலை | : | ரூ. 500/- |
| கணினி அச்சு | : | செ.தீபா (கிரியேட்டர் கிராபிக்சு) சிவகாசி |
| அச்சாக்கம் | : | செல்வவிநாயகம் அச்சகம், சென்னை. |


கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியுடன் இணைந்து திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழகம் **11-07-2015** அன்று நடத்திய அனைத்துலக அளவிலான கதைத் தமிழ் 13- ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு.

15. தமிழில் வரலாற்றுக் கதைகள் திருக்குறள் கதைகள் புள்ளும், பொய்யாமொழியும்
முனைவர் க.சந்திரசேகரன் 77
16. திருக்குறள் கதைகள் தவக்கோலம் ஒரு கருவி
கவிஞர் இரா. சுப்பிரமணியம் 84
17. திருக்குறளில் சிறுகதைக் கூறுகள் ஓர் ஆய்வு
முனைவர் எல். மேகலா 90
18. சிலப்பதிகாரத்தில் கதைத்தமிழ்
அ. கோவிந்தன் 96
19. கதைத்தமிழ் வளர்ச்சியில் சிலப்பதிகாரம்
க. விசயராகவன் 102
20. மணிமேகலையில் ஆபுத்திரன் வரலாறு
முனைவர் க. சித்ரா 109
21. நீலகேசி கதை வடிவங்கள்
முனைவர் இரா.மணிமேகலை 114
22. செவிவழிக் கதைகளில் ஔவையார்
மு. கவிதா 121
23. ஔவையாரின் பிறப்புக் கதைகள்
முனைவர் இலலிதாசுந்தரம் 126
24. ஆத்திசூடி கதைக் கூறுகள்
முனைவர் வே. சசிரேகா 130
25. ஔவையார் அறநெறிக் கருத்துக்களில் வந்த அற்புதக் கதைகள்
ஆ. தனுசு இராமச்சந்திரன் 134

## ஆ. சமயக் கதைகள்

26. புத்தர் நெறிக் கதைகள்
முனைவர் த.நாகம்மாள் 139
27. சிலம்பில் கிளைக்கதைகள்
பெ. தாமரைச்செல்வி 146
28. கம்பராமாயணத்தில் இரணியன் கதை இருத்தலும் இயங்கலும்
முனைவர் க. முருகேசன் 151
29. மகாபாரதத்தில் கிளைக்கதை
கி. அகிலாண்டேசுவரி 158

# 28. கம்பராமாயணத்தில் இரணியன் கதை இருத்தலும் இயங்கலும்

முனைவர் க.முருகேசன்
தமிழ்த்துறைத் தலைவர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

## முன்னுரை

தமிழ்ச் சமுதாயத்தின் தனித்த பண்பாட்டுப் பெட்டகமாகவும், கலைகளின் கருவூலமாகவும் இறைவனாகிய பரம்பொருள் மானுடச் சட்டை தாங்கி மண்ணில் அவதரித்த காப்பியமாகவும் விளங்குவது கம்பராமாயணம். ஆதிகவியாகிய வால்மீகியின் உள்ளத்தில் ஊறிய கனிகளுக்குச் சுவையூட்டிய கம்பர், அக்கனிச்சுவையை மிகுவிக்கும் கவித்திறத்தைக் கற்போர் நன்குணர்வர். ஆறு காண்டங்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களில் இராமனின் இறைத்தன்மையையும், மானுடப் பிறப்பின் மகத்துவத்தையும் பதிவாக்கிச் செல்லும் கம்பர் ஊடாகப் பல கிளைக் கதைகளைக் கொண்டு வந்து தொகுத்துக் காப்பியத்திற்குச் சுவையூட்டுகின்றார். அவ்வகையில் யுத்த காண்டத்தில் இடம்பெற்றுள்ள இரணியன் கதையின் இன்றியமையாமையும், காப்பியப் புலவன் இக்கிளைக் கதையை இடையில் சேர்ப்பதற்கான படைப்பியல் உத்தியையும் இதற்கான காரணத்தையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

## தேவையும், தேடலும்

இரணிய வதைப்படலத்திற்கு முந்தைய படலமாகிய இராவணன் மந்திரப் படலத்திலேயே தான்பாடப்புகுந்த புதிய கதைக்குத் தளம் அமைத்துக் கொள்கிறான் கம்பன். காப்பியத்தில் எங்கெல்லாம் ஏதாவது ஒரு நிகழ்ச்சிப் பற்றி ஆலோசனை நடக்கிறதோ, அங்கெல்லாம் அப்படலத்திற்கு மந்திரப் படலம் என்று பெயர் சூட்டுவது கம்பனுடைய இயல்பு. அனுமன் இலங்கை வந்து சீதையைக் கண்டு, தன் ஒப்பற்ற வலிமையை இராவணனுக்கு உணர்த்தித் திரும்பிய பின்பு, கனவிலும் காண்பதற்கு அரிவு கண்முன் நேரக்கண்ட இராவணன், இத்துணை அழிவிற்குப் பிறகுதான் அரசவையைக் கூட்டி மந்திராலோசனை நடத்துகின்றான்.